**DIABETES ASSOCIATION OF SRI LANKA**
**NATIONAL DIABETES CENTRE**
50, Sarana Mawatha, Kotte Road, Rajagiriya, Sri Lanka
**Tel:** +94 11 2872951-2 / 2883318 **Fax:** +94 11 2872952
**E-mail:** dasl@sltnet.lk **Web:** www.diabetessrilanka.org

unite for diabetes

# தகவல் பத்திரம்

**திட்டத்தின் தலைப்பு:** இலங்கையிலுள்ள நீரிழிவு வகை 1ஐ உடைய நபருக்கான ஒரு தேசிய பதிவேட்டின் அபிவிருத்தி

**முதலான விசாரணையாளர்:** வைத்திய கலாநிதி மஹேன்ர அருணசாந்தி விஜேசூரிய
தொலைபேசி: 0773021666
மின்அஞ்சல்: amrit@slt.lk / dasl@sltnet.lk

இலங்கை நீரிழிவுச் சங்கத்தின் செயலாளரும், தேசிய நீரிழிவு நிலையத்தின் கௌரவ நிர்வாகியும் ஆன வைத்திய கலாநிதி எம். ஏ. விஜேசூரிய ஆகிய நான், இலங்கை நீரிழிவுச் சங்கத்தினால் அபிவிருத்தி செய்யப்படும் நீரிழிவு வகை 1ஐ உடைய நபருக்கான தேசிய பதிவேட்டில் பதிவு செய்வதற்கு உங்களை அன்புடன் அழைக்கிறேன். இந்த முயற்சியில் உங்களுடைய உதவி மற்றும் ஆதரவுக்கு நான் என்றும் நன்றியுள்ளவர்.

## 1. இத்திட்டத்தின் குறிக்கோள்

நிகழ்கால மற்றும் எதிர்கால நீரிழிவு நோய் வகை 1இன் பரம்பல், வருடமொன்றில் நோய் சம்பவங்கள், நோய் நிலை வீதம் மற்றும் இறப்பு வீதம் ஆகியவற்றை துல்லியமாக வரையறை செய்வதே இதன் பிரதான நோக்கமாகும். நீரிழிவு வகை 1ஐ உடைய நபருக்கான தேசிய பதிவேடு இதுவரை எமது நாட்டில் திட்டமிடப்படவில்லை.

## 2. தன்னிச்சையான பங்களிப்பு

இந்தப் பதிவேட்டில் தங்கள் பங்களிப்பு தன்னிச்சையானது. நீங்கள் சுயேச்சையாக இதிலிருந்து விலகிக்கொள்ளவும் முடியும். ஆரம்பத்தில் இப்பதிவேட்டிற்கு இணக்கப்பாட்டை தெரிவித்திருப்பினும் தங்கள் தரவுகளை விலக்கிக்கொள்ள எப்பொழுதேனும் தங்களுக்கு அனுமதியுண்டு. அவ்வாறு செய்ய நேரிட்டாலும் அது தங்கள் மருத்துவ பராமரிப்பு மற்றும் சிகிச்சையை எந்த விதத்திலும் பாதிக்காது.

## 3. இத்திட்டத்தின் நடைமுறை, காலவரையறை மற்றும் பங்குகொள்பவரின் பொறுப்பு

நீங்கள் பங்குபற்ற உடன்பட்டால், கிளினிக்கில் தங்களது வைத்தியர் 10-15 நிமிடங்களுக்கு ஒரு எளிய வினாக்கொத்தை உபயோகித்து தங்களை நேர்காணல் செய்வார். தனிப்பட்ட, குடிவிபர, சமூக பொருளாதார மற்றும் மருத்துவம் தொடர்பான தரவுகள் இந்த நேர்காணலில் அடங்கும். ஏதேனும் குறிப்பிட்ட வினாவுக்கு தாங்கள் பதிலளிக்க விரும்பாவிடின் தாராளமாக அதனை விலக்கிக்கொள்ளலாம்.

## 4. உள்ளார்ந்த சலுகைகள்

இத்திட்டத்தில் உங்கள் பங்களிப்பானது உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பின்வரும் வழிகளில் பயனளிக்கலாம்.

- நீரிழிவு நோய் வகை 1இன் பரம்பல், வருடமொன்றில் நோய் சம்பவங்கள், நோய் நிலை வீதம் மற்றும் இறப்புவீதம் ஆகியவற்றை துல்லியமாக வரையறைசெய்வதன் மூலம் இந்நோயை உடைய நபர்களுக்கான சிறந்த தடுப்பு மற்றும் மேலான

முகாமைத்துவம் வாயிலாக நோயின் சிக்கல்களை குறைவுபடுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ இத் திட்டம் வழிவகுக்கும்.

**5. இடர்கள், ஆபத்துகள் மற்றும் சிரமங்கள்**

இத் திட்டத்தில் பங்குபற்றுவதால் உங்களுக்கு எந்த ஆபத்துக்களோ செலவீனங்களோ இல்லை.

**6. செலவு ஈடு செய்தல்**

செலவு ஈடு செய்யப்படமாட்டாது.

**7. நம்பகத்தன்மை**

உங்களது தனிப்பட்ட தரவுகள் கணனி மென்பொருளில் இரகசிய இலக்கங்களால் பாதுகாக்கப்படுவதன் மூலம் நம்பகத்தன்மை பேணப்படும். எண் தரவுகள் மட்டும் தனிப்பட்ட நபரை அடையாளம் காணாதமுறையில் விஞ்ஞான ஆய்வுகள், கோட்பாடுகளின் திட்டமிடல் மற்றும் வெளியீடுகளுக்கு உபயோகிக்கப்படும்.

**8. இத் திட்டத்திலிருந்து உங்கள் பங்களிப்பை விலக்குவது**

இத் தேசிய பதிவேட்டிற்கான தங்கள் இணக்கப்பாட்டை எப்பொழுதேனும் விலக்கிக் கொள்ளலாம். இது தங்கள் மருத்துவ பராமரிப்பை எந்த விதத்திலும் பாதிக்காது. எனினும் அவ்வாறு செய்வதெனில் பிரதான விசாரணையாளருக்கு எழுத்து மூலம் முற்கூட்டியே தெரிவிக்கவேண்டும்.

**9. விளக்கம்**

இத்திட்டத்தின் நடைமுறை அல்லது தகவல் தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு, தயவுசெய்து 011-2872951/ 011-2872952/ 011-2883318 தொலைபேசியூடாக என்னை தொடர்புகொள்ளுங்கள்.